# நம் பாடுகளில் தேவனுடைய வழிகள்

Transcribed from a message spoken on October 2016, in Chennai

By *R.S.Milton*

## 1. தேவனுடைய மக்களுக்கும் துன்பங்கள் நேரிடும்

தேவனுடைய மக்களைப்போல இளைப்பாறுதலும், மகிழ்ச்சியும் உள்ளவர்கள் வேறு யாரும் இல்லை. நம்முடைய வாழ்க்கையிலே துன்பங்கள் உண்டு. ஆனால், இளைப்பாறுதலின் காலங்களைத் தேவன் நமக்குத் தருகிறார். "*நான் படுத்து நித்திரை செய்தேன்; விழித்துக்கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார்*" (சங். 3:5) என்றும், "*சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரைசெய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்" (சங். 4:8) அல்லது "நீரே என்னைத் தாங்குகிறீர்,*" என்றும் சங்கீதக்காரராகிய தாவீது சொல்கிறார். இப்படி இளைப்பாறுதலோடு கர்த்தர் நம்மைத் தாங்கு கிறார்; அவர் நம்மைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறார். அவருடைய ஆளுகைக்கும், இறையாண் மைக்கும்மீறி நம்முடைய வாழ்க்கையிலே ஒன்றும் நடந்துவிடப் போவதில்லை என்பதால் போர்க்கள மாக இருந்தால்கூட நாம் அங்கு சமாதானமாய்ப் படுத்துத் தூங்கலாம். அதற்காகப் போர்க்களத்திலே நம்முடைய பொறுப்பை விட்டுவிட்டுப் போரிடாமல் படுத்துத் தூங்க வேண்டும் என்று நான் சொல்ல வில்லை. ஆனால், பாடுகளும், பிரச்சினைகளும் நம்மை மேற்கொள்ளும்போது நாம் கவலைப்படாமல் படுத்துத் தூங்கலாம். "*எனக்கு விரோதமாக ஒரு பாளயம் இறங்கினாலும், என் இருதயம் பயப்படாது. என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன். கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆல யத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்,*" (சங். 27:3, 4) என்று தாவீது சொல்கிறான். "*பிரபுக்களும் உட்கார்ந்து எனக்கு விரோதமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். உமது அடியேனோ, உமது பிரமாணங் களைத் தியானிக்கிறேன்*" (சங். 119:23). பிரபுக்கள் நமக்கு எதிராக உட்கார்ந்து ஆலோசனை பண்ணி னால் அந்தப் பிரபுக்களுடைய எதிரிகள் யார் என்று கண்டுபிடித்து, அவர்களைத் தொடர்புகொண்டு, அந்தப் பிரபுக்களுக்கு எதிராக ஆலோசனை பண்ணுவது உலகத்து ராஜாக்களுடைய வழக்கம். ஆனால், தாவீது இந்த உலகத்தின் அரசன் அல்ல. இந்த உலகத்தில் முதன்மையாகவும், பிரதானமாக வும் அவன் தேவனுடைய மனிதன், தேவனுடைய பணியாள், தேவனுடைய வேலைக்காரன், தேவ னுடைய அடிமை.

ஆகவே, தேவனுடைய மக்களாகிய நாம் எல்லா நிலையிலும் இளைப்பாறுதலோடு, மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும், இருக்கலாம். இப்படிப்பட்ட கர்த்தரைத் தெய்வமாய்க்கொண்ட ஜனமும், அவர் தெரிந்துகொண்ட சந்ததியும் பாக்கியமுள்ளது. எனவே, "நீங்கள் ஏன் மகிழ்ச்சியாகவே இருக்க மாட் டேன் என்கிறீர்கள்! நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்," என்ற கூடுதல் கட்டளையை நான் கொடுக்க விரும்பவில்லை. "நான் ஏற்கெனவே மிகவும் துன்பத்திலே இருக்கிறேன். இவர் வேறே என்னை மகிழ்ச்சியாக இரு என்று மிகவும் வாட்டுகிறார்," என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால், நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்குப் போதுமான ஏற்பாடுகளை நம்முடைய ஆண்டவரும், இரட்சகரு மாயிருக்கிற இயேசுகிறிஸ்து செய்திருக்கிறார்.

### பவுலின் வேண்டுகோளும், சாட்சியும்

"*எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள்*" (பிலி. 4:4) என்று எழுதினவன் சிறைச்சாலையிலிருந்து அதை எழுதினான் என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். பூஞ்சோலையிலிருந்து "நீங்கள் எப் பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள்" என்று அவன் கவிதை பாடவில்லை. ரோமச் சிறைச்சாலையிலே இருக்கும்போது "*நீங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள்,*" என்று அவன் எழுதுகிறான். "*நானும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறேன்,*" என்று எழுதுகிறார்.

ஆகவே, தேவனுடைய மக்களுடைய ஒரு குணம் மகிழ்ச்சியாயிருப்பது. மகிழ்ச்சியாயிருப்பதற்கும் நாம் பழக வேண்டியுள்ளது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! துன்பங்கள் இல்லாத மனித வாழ்க்கை இல்லை. துன்பங்கள், துக்கங்கள், பாடுகள், உபத்திரவங்கள், வருத்தங்கள், வேதனைகள், வலிகள், நோவுகள், பயங்கள், திகில்கள் இல்லாத மனித வாழ்க்கை இல்லை. "*வெளியே போராட்டங்களும் உள்ளே பயங் களும் இருந்தன,*" (2 கொரி. 7:5) என்று சொல்பவன் ஒரு சாதாரண மனிதன் இல்லை. பரதீசுக்கு

எடுக்கப்பட்டு மனிதர்கள் கேட்டறியாத வார்த்தைகளைக் கேட்ட ஒரு அப்போஸ்தலன், "*வெளியே போராட்டங்களும் உள்ளே பயங்களும் இருந்தன,*" என்று சொல்கிறான்.

**தாவீதின் சாட்சி**

தாவீது, "*இந்த ஏழை கூப்பிட்டான். கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்க லாக்கி இரட்சித்தார்,*" (சங். 34:6) என்று சொல்கிறான். சிங்கத்தின் தாடையைக் கிழித்தவன். கரடியின் தாடையைக் கிழித்தவன். அவனுக்குப் பயம் வருமா?

நான் சிங்கத்தின் தாடையையோ, கரடியின் தாடையையோ கிழிக்கவில்லை. அப்படிப்பட்ட துன்பங்கள் நம்முடைய வாழ்க்கையில் நேரிடும்போது, நம் துன்பங்களிடையே தேவனுடைய வழிகள் என்னவென்று நான் இன்றைக்குப் பகிர்ந்துகொள்ளப்போகிறேன். God's ways in our sufferings. துன்பங்கள் நேரிடும் போது மனிதர்கள் பல்வேறுவிதமாக react பண்ணுவார்கள்; பல்வேறுவிதமாக respond பண்ணுவார்கள். நூறு மனிதர்கள் நூறு விதங்களிலே respond பண்ணுவார்கள்.

தேவனுடைய மக்களுக்குத் துன்பம் நேரிடுகிறது. துன்பங்கள் நேரிடும்போது அதிலே தேவனுடைய வழிகள் என்ன, தேவன் தம்முடைய மக்களிடத்திலே என்ன எதிர்பார்க்கிறார் என்பதை நாம் கற்றுக் கொள்வது, அந்தத் துன்பங்களை எதிர்கொள்வதற்கும், துன்பங்கள் நிறைந்த நாட்களை நாம் கடந்து போவதற்கும், தேவனுக்குச் சித்தமானால் அந்தத் துன்பங்களைவிட்டு வெளிவருவதற்கும் உதவியாக இருக்கும்.

"*பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்..*" என்று 1 பேதுரு 4:12 சொல்கிறது. துன்பங்கள் நேரிடும்போது அது ஏதோவொரு புதுமை என்று நினைத்துவிட வேண்டாம். "எனக்கு மட்டும் இந்தத் துன்பம் நேரிடு கிறது. மற்றவர்களுக்கு இப்படிப்பட்ட துன்பங்கள் நேரிடுவதில்லை," என்று நாம் நினைக்கக்கூடாது. பற்றியெரிகிற தீயைப்போல துன்பங்கள் நேரிட்டாலும் இந்தத் துன்பங்கள் எல்லா மனிதர்களுக்கும் நேரிடுகிற துன்பங்கள்.

1 கொரிந்தியர் 10:13 நமக்குத் தெரியும். "*மனிதர்களுக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை.*" மனித வாழ்க்கை, உடல் வாழ்க்கை, என்று ஒன்று உள்ளவரை எல்லா மனிதர்களுக்கும் சோதனைகள் உண்டு. துன்பங்கள் உண்டு. இது முதலாவது குறிப்பு.

**பிரபலமான சுபிட்ச நற்செய்தி**

இதையே இன்னொரு குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் "இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் உங்களுடைய வாழ்க்கையிலே ஒரு துன்பமும் நேரிடாது," என்று சொல்லுகிற தேவ மக்கள் பலர் இருக்கின்றார்கள்; பல்லாயிரம் இருக்கிறார்கள்; பல இலட்சம் இருக்கின்றார்கள். இதற்குப் பெயர் சுபிட்ச நற்செய்தி. Prosperity gospel. ஞாயிற்றுக்கிழமை காலையில் அப்படிப்பட்ட சுபிட்ச நற்செய்தி யைக் கேட்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் air-condition hallஇலே வரிசை வரிசையாய் உட்கார்ந் திருப்பார்கள். அவர்கள் பாடுகிற பாடல்களும் அப்படித்தான் இருக்கும். "பலவீனன் அல்ல, பலவீனன் அல்ல, பலவான் நான் இயேசு சொன்னார்." "இயேசுவை ஏற்றுக்கொண்டால் உன்னுடைய வாழ்க்கை யிலே பொருளாதாரக் குறைவே இருக்காது. நீதான் 'Mr.World'ஆக இருப்பாய். Fittest personஆக இருப்பாய். உன்னுடைய பிள்ளைகளெல்லாம் மிகவும் உயர்வான இடங்களுக்கு வருவார்கள்," என்று பிரசங்கிப்பார்கள்.

அதற்காக, "நாம் எப்போதுமே நோய் நொடியில்தான் இருப்போம், வறுமையில்தான் இருப்போம், நம் முடைய பிள்ளைகள் நல்ல நிலைமைக்கு வரமாட்டார்கள்," என்று நான் சொல்லவில்லை.

ஆனால், "இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது இந்த உலகத்து நன்மைகளுக்காகவே. இந்த உலகத் திலே நன்மையைத்தவிர தீமை என்று ஒன்று உங்களுக்கு நேரிடாது. தீமை என்று ஒன்று உங்களுக்கு நேரிட்டால் அதற்குக் காரணம் உங்கள் அவிசுவாசம்," என்று போதிக்கிறவர்கள் உண்டு. எங்கோ ஒரு மூலையில் இப்படிச் சொல்லவில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் கூடிவருகிற சபைகளில் இப்படிச் சொல்லுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, ஆயிரக்கணக் கானவர்கள் கூடிவருவதற்கு காரணமே அப்படிப்பட்ட சுபிட்ச நற்செய்திதான்.

நாம் அதை சமநிலைப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக நாம் எப்போதும் தொங்கின முகமும் தோய்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்றோ, எப்போதும் "எங்களுக்கு வறுமை உண்டு, நோய்

நொடிகள் உண்டு, குடும்பத்திலே எங்கள் பிள்ளைகள் நன்றாகப் படிப்பதில்லை. அப்படிப்பட்ட வாழ்க்கையைத்தான் தேவன் எங்களுக்கு வைத்திருக்கிறார்," என்றோ எண்ணவேண்டியதில்லை. அது வும் இல்லை.

துன்பங்கள், சோதனைகள், பாடுகள், உபத்திரவங்கள் என்பது எல்லா மனிதர்களுக்கும் நேரிடுவது. தேவனுடைய மக்களுக்கும் அது நேரிடும்.

தேவனை ஒரு வியாபாரப்பொருளாகக் கருதுகிறவர்கள் வெள்ளிக்கிழமையோ, ஞாயிற்றுக்கிழமையோ கோயிலுக்குப் போய் கடவுளுக்கு ஒரு காணிக்கைக் கொடுத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைக்கிறார்கள். "நான் உமக்கு காணிக்கைக் கொடுப்பேன். நீர் எனக்கு எந்த தீங்கும் வராமல் பார்த் துக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல. இந்த உலக வாழ்க்கையிலே, உடல் வாழ்க்கையிலே, எனக்கும் என் குடும்பத்துக்கும் எல்லா நன்மைகளும் வருமாறு நீர் உத்தரவாதம் பண்ணிக்கொள்ள வேண்டும்," என்பதுபோல் நடக்கிறார்கள்.

தேவனை அறியாத மக்கள் "இவர் visa கொடுக்கிற கற்பனைக் கடவுள். இவர் வேலை கொடுக்கிற கற்பனைக் கடவுள். சுகம் கொடுக்கிற கற்பனைக் கடவுள்," என்று ஒவ்வொரு நன்மையைத் தருகிற ஒரு கற்பனைக் கடவுளை வைத்திருக்கிறார்கள். அதுபோல கிறிஸ்தவர்களும், "இவர் சுகம் கொடுக்கிற இயேசுகிறிஸ்து. இவர் visa கொடுக்கிற இயேசுகிறிஸ்து. இவர் பணம் கொடுக்கிற இயேசுகிறிஸ்து," என்று ஏறக்குறைய அப்படிப்பட்ட நிலைமையிலே வாழ்கிறார்கள்.

இது நல்ல தொடக்கம் இல்லை என்று நீங்கள் மனம் துவண்டுபோக வேண்டாம். தேவனுடைய வழி என்னவென்று நாம் தெரிந்துகொண்டால் தேவனுடைய வழிகளிலே நாம் நடக்கும்போது, துன்பங்கள் நேரிடுகிற காலத்திலே தேவனுடைய வழிகளிலே நாம் நடந்துபோனால், அவைகளை மகிமையான முடிவாய் நாம் மாற்றிக்கொள்ளலாம்.

முதலாவது, எல்லாருக்கும் துன்பங்கள் நேரிடும். தேவனுடைய மக்களுக்கும் அது நேரிடும். "ஏன் எனக் குத் துன்பங்கள் நேரிட்டன?" என்று கேட்க வேண்டாம். அது எல்லா மனிதர்களுக்கும் நேரிடுவது. உடல் என்று ஒன்று இருக்கிறவரை அதிலே பலவீனங்களும், நோய்களும் உண்டு. ஏனென்றால், நம் உடல் இரும்பால் செய்யப்பட்டதா? இது ஒரு மண்கூடு.

## 2. எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் பாவம் இல்லை

இரண்டாவது குறிப்பு, இது மிக எளிமையான ஒரு குறிப்பு. எல்லா துன்பங்களும் நாம் செய்கிற பாவங்களால் நேரிடுவதும் அல்ல. "உமக்கு இந்தத் துன்பங்கள் நேரிட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் நீர் பாவம் செய்திருக்கிறீர்," என்று யோபுவின் நண்பர்கள் வாதிடுவதும், அதற்கு யோபுவினுடைய பிரதிவாதமுமே யோபுவின் புத்தகத்தின் மிக அடிப்படையான காரியம். "பாவம் செய்வதினால் மட்டும் தான் மனிதர்களுக்குத் துன்பம் நேரிடுகிறது," என்பதுதான் யோபுவின் நண்பர்களுடைய வாதம்.

யாருக்காவது நோய் வந்துவிட்டதென்றால் "அவர்கள் என்னைவிட அதிகமான பாவம் செய்தார்கள்," என்று எண்ணுபவர்கள் உண்டு. ஒருவேளை அவர்களுடைய பெற்றோர் வறுமையான குடும்பத்தில் பிறந்திருப்பார்கள். நல்ல உணவு கிடைத்திருக்காது. ஆகவே, அவர்களை நோய் தாக்குவது எளிதாக இருக்கும். அது காரணமாக இருக்கும்.

ஆனால், பாவங்களினால் ஏற்படும் துன்பங்களும் இருக்கின்றன. இது சிக்கலைத் தருகிறது. இப்போது இனம்பிரிக்க வேண்டியிருக்கிறது. "இந்தத் துன்பம் பாவத்தினால் வந்த துன்பமா அல்லது பாவத்திற் கும் இந்தத் துன்பத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லையா?" என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

### துன்பங்களின்போது நம்மை ஆராய்ந்துபார்த்தல்

துன்பம் நேரிடும்போது எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்றால், "*தேவனே, என்னை ஆராய்ந்து, என்னை அறிந்துகொள்ளும். என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்,*" *(139:23, 24)* என்று சங்கீதக்காரன் ஜெபிப்பதுபோல நாம் தேவனிடத்திற்குச் சென்று விசாரிக்க வேண் டும். கண்மூடித்தனமாக இருக்கக் கூடாது. "ஆண்டவரே, என்னை ஆராய்ந்து, என்னுடைய உள்ளத்தில் இருப்பதை நீர் அறிந்துகொள்ளும்." "*நான் உபத்திரவப்படுவதற்குமுன் வழிதப்பி நடந்தேன்...*" (சங். *119:67)* என்று தாவீது சொல்கிறார்.

இஸ்ரயேல் மக்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனதற்குக் காரணம் அவர்களுடைய பாவம், அவர்களுடைய அக்கிரமம், அவர்களுடைய மீறுதல், அவர்களுடைய கொடுமைகள். மனிதர்களுக்கு நேரிடுகிற சோதனையைப்போல இது நாடுகளுக்கு நேரிடுகிற சோதனை என்று அவைகளை அலட் சியம்பண்ணக்கூடாது. "நாடுகள் பிற நாடுகள்மேல் படையெடுத்து வருவதுபோல அவர்கள் எங்கள் நாட்டுக்கும் படையெடுத்து வந்தார்கள்," என்று மேலோட்டமாகப் பார்க்கக்கூடாது.

இது இரண்டாவது குறிப்பு. ஒரு நோய் வருகிறதென்றால்கூட நான் தேவனிடத்தில் விசாரிப்பேன். அதற்காக நாம் குற்ற உணர்ச்சியிலே மாய்ந்துபோக வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், விசாரிக்காமல் இருப்பது ஆரோக்கியமான நிலை இல்லை. கத்தோலிக்க மக்கள் பயன்படுத்துகிற வார்த்தை *தற்பரிசோதனை.* நல்ல வார்த்தை. தற்பரிசோதனை இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஆண்டவரிடத்தில் போய், "ஆண்டவரே, நான் காணத் தவறின ஒரு குறையோ, ஒரு குற்றமோ, ஒரு பாவமோ, ஒரு மீறுதலோ என்னுடைய வாழ்க்கையில் உண்டென்றால் நீர் அதைக் காண்பியும்," என்று விசாரிக்க வேண்டும். தேவன் அதை உணர்த்தும்போது அதற்காக நாம் மனந்திரும்ப வேண்டும். அதற்காக நாம் பாவ அறிக்கை செய்ய வேண்டும்.

## பாவங்களுக்கு மன்னிப்பு உண்டு

நாம் செய்கிற எல்லா பாவங்களுக்காகவும் தேவன் உடனே பிரம்பை எடுத்து அடிப்பார் என்று நினைக்க வேண்டாம். அவர் நீடிய பொறுமையுள்ளவர்.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். சில சமயங்களில் தேவன் பாவங்களுக்காகத் தண்டித்தபோதும் சாகிற அளவுக்குத் தண்டிக்க மாட்டார். இந்தக் கோட்பாடு வேதத்திலே ஓடுகிறது. "*நீர் என்னை வெகு வாய்த் தண்டித்தும் என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை,*" (118:18) என்று தாவீது சொல்கிறார். "நீ அவனைத் தொடலாம். ஆனால் அவன் உயிரை மட்டும் தொடக்கூடாது," (யோபு 1:12) என்று தேவன் சாத்தானிடம் சொன்னாரே! இது ஒருவேளை யோபுவைச் சுற்றியிருந்த ஒரு வேலியைத் திறந்து விடுவதைப்போல. இரண்டாவது வேலியைத் திறந்து விடுகிறார். மூன்றாவது வேலியைத் திறந்து விடுகிறார். ஆனால், ஒரு வேலியை எந்த நபருக்கும் தேவன் திறந்துவிடுவதில்லை. அந்த வேலி என்ன? உயிர். அது யாருடைய கரங்களில் இருக்கிறது? "*என் காலங்கள் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது*" (சங். 31:15). அதன் பொருள் என்னவென்றால் நம்முடைய உயிர் தேவனுடைய கையில் இருக்கிறது. இது தேவனுடைய பிள்ளைகளுடைய சிலாக்கியம். இது இரண்டாவது குறிப்பு.

எல்லாத் துன்பங்களும் பாவங்களினால் அல்ல. ஆனால் சில துன்பங்கள் பாவங்களினால் விளைகிறது. அவர் தண்டிக்கும்போதுகூட மட்டாய்த் தண்டிக்கிறார். "*அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக் கிறார்*" (சங். 103:10). நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக அப்படியே தராசிலே போட்டு அளந்து பார்த்து "இந்தப் பாவத்திற்கு இந்தத் தண்டனை" என்று அவர் தண்டிப்பதில்லை. அவர் அப்படிச் செய்தால் ஒரு மனிதனும் அவருக்குமுன்பாக நிற்க மாட்டான். அதிகமான தள்ளுபடி கொடுத்துத்தான் அவர் நம்மைத் தண்டிக்கிறார். Amazing discounts! ஒரு சதவீதம் தண்டிப்பார். அது அவருடைய திர ளான இரக்கங்கள்! "*உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு*" (சங். 130:4). எந்தத் தெய்வத்தைப்பற்றி மனிதர்கள் இப்படிச் சொல்வார்கள்? "உமக்குப் பயப்படும்படி உம்மிடத்தில் கடுமை யான தண்டனை உண்டு," என்று வேதாகமம் சொல்லவில்லை. "உமக்குப் பயப்படும்படி உம்மிடத்தில் திரளான மன்னிப்பு உண்டு."

தமிழ் இலக்கியத்திலே ஒரு நிகழ்ச்சி உண்டு. ஒரு தாதி பிள்ளையை அடிக்கும்போது அந்தக் கோலிலே பூவைச் சுற்றிவைத்து அடிப்பாளாம். பிள்ளையை அடிக்கவும் வேண்டும்; ஆனால், பிள்ளைக்கு வலிக் கவும் கூடாது. ஆங்கிலத்தில் "hitting with velvet hand, velvet rod" என்று சொல்வார்கள். தேவன் ஏறக் குறைய நம்மை அப்படித்தான் அடிக்கிறார். நம்முடைய பாவத்திற்காக நம்மைத் தண்டிக்கும்போதுகூட அவர் நம்மை மட்டாய்த் தண்டிக்கிறார். ஒன்று குறைய நாற்பது அடிகள் என்பதினுடைய பொருள் என்னவென்றால் தேவன் நம்முடைய உயிர் போகும் அளவுக்கு நம்மைத் தண்டித்துவிடுவது இல்லை.

இந்தக் கோட்பாட்டை தேவனுடைய மக்களாகிய நாம் நன்றாய்க் கற்றுக்கொள்ள வேண்டும். உயிர் போகப்போகிறது என்றால் தேவன் கடுமையான எச்சரிப்பை மிகவும் வெளிப்படையாகத் தருவார். "நீ நடந்து போகிற போக்கு, திசை, வேகம் பலரைப் பாதிக்கிறது; பலருக்கு அது தீங்கு விளைவிக்கிறது. அதனால் உன்னுடைய வாழ்க்கையை நான் முடிக்கப்போகிறேன்," என்று தேவன் சொல்வார்.

மூன்றாவது குறிப்புக்கு வருவோம். முதலாவது குறிப்பு, **எல்லா மனிதர்களுக்கும் நேரிடுகிற துன்பங்கள்தான் தேவ மக்களுக்கும் நேரிடுகின்றன**. இரண்டாவது, **எல்லாத் துன்பங்களுக்கும் பாவங்கள் காரணம் இல்லை**. ஆனால், சில துன்பங்களுக்குப் பாவங்கள் காரணமாக இருக்கின்றன. ஆகவே நாம் தேவனிடத்தில் நம்மைத் தாழ்த்தி, விசாரிக்க வேண்டும். அந்தப் பாவத்திற்காக நாம் மனந்திரும்பும் போது தேவன் அந்தத் துன்பத்தை நீக்கிவிடுகிறார்.

### 3. நம்முடைய உள்ளமைப்பை மாற்றுவதற்காக

மூன்றாவது, **நம்முடைய துன்பங்களை வெறுமனே random events என்று நாம் கருதக்கூடாது.** நம்முடைய உள்ளமைப்பு என்று ஒன்று உண்டு. இந்த உள்ளமைப்பைப் பரிசுத்த ஆவியானவர் மாற்றுவதற்கு நம்முடைய வாழ்வில் துன்பங்களைப் பயன்படுத்துகிறார். இது மிக முக்கியமான ஒரு குறிப்பு. நம்மை உடைக்கப்பட்ட ஒரு பாத்திரமாக, ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பாத்திரமாக, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமான ஒரு பாத்திரமாக, பாதுகாப்பான ஒரு பாத்திரமாக, மாற்றுவதற்கு தேவன் நம் உள்ளமைப்பைத் தொட்டு மாற்ற வேண்டும். பாதுகாப்பான பாத்திரம் என்றால் தேவன் ஒரு மனிதனை மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கு, பயன்படுத்துவதற்கு, அவன் பாதுகாப்பான ஒரு ஆளாக இருக்க வேண்டும். அவனுடைய குணத்திலே, அவனுடைய பார்வையிலே, நடை உடை பாவனையிலே, அவனுடைய எண்ணங்களிலே, அவனுடைய விருப்பங்களிலே, அவனுடைய உரையாடல்களிலே, அவனுடைய சொல்லாடல்களிலே, அவன் பாதுகாப்பானவனாக இருக்க வேண்டும்.

சில கருவிகள் பாதுகாப்பான கருவிகள். சில கருவிகள் பாதுகாப்பற்ற கருவிகள். மின்சாரத்தோடு தொடர்புடைய வேலை செய்யும்போது நல்ல பாதுகாப்பான உபகரணங்களும் உண்டு, பாதுகாப்பில்லாத உபகரணங்களும் உண்டு. தேவன் நம்முடைய உள்ளமைப்பை ஏன் சரிசெய்ய வேண்டும் அல்லது உடைத்து மாற்ற வேண்டும் என்றால் நம்பத்தக்க, பாதுகாப்பான, பயன்படுத்தத்தக்க, மற்றவர்களை ஆசீர்வதிக்கக்கூடிய, பாத்திரங்களாக உண்டாக்குகிறார்.

யாப்போக்கு ஆற்றங்கரையிலே தேவன் யாக்கோபோடு போராடினார். விடியற்காலம்வரை போராடியும் அவன் மேற்கொள்ளாததைக் கண்டு, தேவன் அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார். எதற்காக தொடைச்சந்தைத் தொட்டார்? பாவத்துக்காக அல்ல. எல்லா மனிதர்களுக்கும்தான் சுளுக்குகிறது; அது போல யாக்கோபுக்கும் சுளுக்கினது என்பது யதார்த்தமானது அல்ல. அவனுடைய உள்ளமைப்பை மாற்றுவது. அதன்பிறகு அவன் நொண்டி நொண்டி நடந்தான். தன்னுடைய வாழ்க்கையில் மீதமுள்ள காலமெல்லாம் அதற்குமுந்தி நடந்ததுபோல் அவன் கம்பீரமாய் நடக்கவில்லை. நடை கம்பீரமானதில்லை. ஆனால், அந்த மனிதன் தேவனுக்குமுன்பாக ஒரு இளவரசன் ஆகிவிட்டான். “*நீ இனி யாக்கோபு என்று அழைக்கப்படாமல் இஸ்ரயேல் என்று அழைக்கப்படுவாய்*” (ஆதி. 35:10). ஆனால் அப்படி அழைக்கப்படுவதற்குமுந்தி தேவன் அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார். அதன்பிறகு அவன் ஒரு கோலை வைத்துக்கொண்டு நொண்டி நடந்தான். “*அவன் தன் கோலின் முனையிலே சாய்ந்து கர்த்தரைத் தொழுதுகொண்டான்,*” (எபி. 11:21) என்று எழுதியிருக்கிறது.

நம்முடைய உள்ளமைப்பை நாம் கண்டுபிடிக்க மாட்டோம். நம்மைச் சுற்றியிருக்கிறவர்கள் ஓரளவுக்குக் கண்டுபிடிப்பார்கள். சில சமயங்களில் நாம் மிக நகைச்சுவையாகப் பேசுவோம். நகைச்சுவையாகப் பேசுவது மற்றவர்களைப் புண்படுத்தும், காயப்படுத்தும். காயப்பட்டவர்கள் நம்மிடத்தில் சொல்லமாட்டார்கள். ஒரு வீட்டிலே போய் மோர் குடிக்கிறோம். மோரைக் குடித்தபின், “பிரதர் வீட்டிலே தண்ணீர் எவ்வளவு ருசியாக இருக்கிறது,” என்று சொல்லும்போது நான் நகைச்சுவையாகப் பேசுவதாக நினைக்கலாம். ஒரு மாணவன் வகுப்புக்குத் தாமதமாக வருகிறான் என்று வைத்துக்கொள்வோம். அந்த வகுப்பு ஆசிரியர் அந்த மாணவனைப் பார்த்து, “You are too early for the next class. என்னப்பா அடுத்த வகுப்புக்கு இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாய்,” என்று சொல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். இது நகைச்சுவையா? இல்லை. “இப்படி வாழவில்லையென்றால் வாழ்க்கை மிகவும் சலிப்பாக இருக்குமே!” என்றால் It is better to be boring than to be very comedy making person and to hurt others left, right and middle. நான் நகைச்சுவைக்கு எதிரானவன் இல்லை. இதுபோல சில சமயங்களில் நாம் நிற்கிற நிலை, நம்முடைய தொனி அப்படிப்பட்ட ஒரு காயத்தை அவர்களுக்கு ஏற்படுத்தும். இதற்கெல்லாம் பெயர்தான் உள்ளமைப்பு.

உள்ளமைப்பு என்பதற்கு நான் ஒரு நீண்ட அட்டவனை சொல்வது உண்டு. **நம்முடைய சாய்மானங்கள், நம்முடைய நாட்டங்கள், நம்முடைய தேட்டங்கள், நம்முடைய விருப்பங்கள், நம்முடைய முன்னுரிமைகள், நம்முடைய சுவைகள், நம்முடைய நடை, உடை, பாவனைகள், நம்முடைய ஏக்கங்கள்,**

**நம்முடைய தவிப்புகள், நம்முடைய கதறுதல்கள்** இவைகளெல்லாம் எப்படியிருக்கிறதோ இவைகளால் ஆனதுதான் உள்ளமைப்பு. இந்த உள்ளமைப்பை genetic என்று சொல்லலாம். அது பல்வேறு காரணங்களால் ஆனது. துன்பங்கள் வழியாய் தேவன் செய்கின்ற ஒன்று என்னவென்றால் நம்முடைய உள்ளமைப்பை உடைப்பது. எந்த மனிதனும் அல்லது எந்தப் புத்தகமும் செய்யமுடியாத ஒன்றை அப்படிப்பட்ட துன்பத்தின் பாதையில் நடத்துவதன்மூலமாக தேவன் ஒரு மனிதனிடத்தில் செய்து முடிப்பார்.

"ஆனபடியினாலே எங்கள் புறம்பான மனிதனானது அழிந்தும் எங்கள் உள்ளான மனிதனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது" (2 கொரி. 4:16). "Even though our outer man is decaying yet our inner man is being renewed day by day". இது மூன்றாவது குறிப்பு.

**முதல் குறிப்பு, எல்லா மனிதர்களுக்கும் துன்பங்கள் நேரிடும். இரண்டாவது, எல்லாத் துன்பங்களும் பாவங்களினால் நேரிடுவது இல்லை. ஆனால் துன்பம் நேரிடும்போது நாம் பாவம் செய்தோமோ என்று தேவனுக்கு முன்பாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். மூன்றாவது குறிப்பு, நம்முடைய உள்ளமைப்பை உடைப்பதற்காக.** "உடைப்பதற்காக" என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம். "To break our outer man, **நம்முடைய புறம்பான மனிதனை உடைத்து உள்ளமைப்பை மாற்றுவதற்காக**.

### 4. துன்பங்களின் நோக்கம் சகிப்புத்தன்மையை உருவாக்குதல்

நான்காவது குறிப்பு, **சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியவான்**. "*சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியவான்*" (யாக்கோபு 1:12). அதுபோல "*பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவிலே பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமை என்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்*" (1 பேதுரு 4:12, 13). ஆகவே, நான்காவது குறிப்பு, துன்பம் நேரிடும்போது நம்முடைய மாறுத்தரம் என்னவாக இருக்க வேண்டுமென்றால் சகிக்க வேண்டும். யாராவது ஒரு வார்த்தை சொன்னாலும் சரி, ஒரு வார்த்தை சொல்லாவிட்டாலும் சரி. துன்பங்கள் என்று சொல்வது பல்வேறு விதமான துன்பங்கள். நம்முடைய உடல்நலக் குறைவினாலே வருகிற துன்பங்கள். பொருளாதார நெருக்கம். வறுமையினாலே வருகிற துன்பங்கள். உறவுகளினாலே வருகிற துன்பங்கள். ஒருவேளை பிள்ளைகள் தங்கள் பொறுப்புகளைச் செய்யமாட்டேன் என்கிறார்கள். காலையில் எழுந்து கல்லூரிக்குப் போவது கிடையாது. சாயங்காலம் வந்து படிப்பது இல்லை. கைபேசியை வைத்துக் கொண்டு பார்த்துக்கொண்டேயிருக்கிறார்கள் அல்லது முகநூலை நோண்டிக்கொண்டேயிருக்கிறார்கள். கடைசியிலே பார்த்தால் எத்தனையோ தேர்வுகளில் தோற்றுப்போகிறார்கள் என்று சொல்லும்போது அந்தப் பெற்றோர்கள் துன்புறுகிறார்கள். பிள்ளைகளும் துன்புற வேண்டும். பெற்றோர்கள், "நான் இவ்வளவு செய்திருக்கிறேன். தங்கப் பதக்கம் வாங்கமாட்டேன் என்கிறாயே!" என்று சொல்லலாம். "தங்கப் பதக்கம் வாங்கக்கூடிய அளவுக்குத் திராணி என்னிடம் இல்லை," என்று பிள்ளைகளும் துன்புறலாம்.

நம்முடைய எல்லா உரையாடல்களிலும், உறவுகளிலும் துன்பங்கள் நேரிடும். எந்தக் கணவன் மனைவியாவது எழுந்து நின்று, "எங்கள் உறவுகளில் ஒருநாளும் துன்புற்றதே இல்லை," என்று சாட்சி சொல்ல முடியுமா? தவறான புரிந்துகொள்ளுதல்கள், புரிந்துகொள்ள வேண்டிய வண்ணம் புரிந்துகொள்ளவில்லை, எதிர்பார்த்ததை அவர்கள் செய்யவில்லை என்று இப்படிப் பல்வேறு விதமான புரிந்துகொள்ளுதல்கள். நம்முடைய சகோதர சகோதரிகளிடத்தில், நம்முடைய குடும்பங்களில், அனுபவிக்கிறதையெல்லாம் துன்பங்களின் பட்டியலிலே சேர்த்துக்கொள்ள வேண்டாம்.

நான் சொல்வது நீண்டகால துன்பங்கள். வேலை பார்க்கிற இடத்திலே ஒரு அதிகாரி இருக்கிறார். நம்மை அதிகமாகத் துன்புறுத்துகிறான். வேலைக்குப் போவதற்கே பயமாக இருக்கிறது. இது என்ன? துன்பம். அப்படிப்பட்ட துன்பங்களைப்பற்றிப் பேசுகிறேன்.

துன்பங்கள் நம்முடைய உடலில் வரலாம், நம்முடைய குடும்பத்தில் வரலாம், வேலைசெய்கிற இடத்தில் வரலாம், நம்முடைய பொருளாதாரத்திலே வரலாம். நன்றாய்க் கவனித்துப் பாருங்கள். நாமெல்லாரும் ஒரு வேலைக்குப் போகிறோம். ஒரு மாதத்திற்கு இவ்வளவு சம்பளம் வருகிறது. நாம் வாழ்கிறோம். திடீரென்று நம்முடைய உடல்நலம் கெட்டுப்போகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். மாதச் சம்பளம் நமக்கு இல்லை. எதைவைத்து வாழ்வோம்? கிறிஸ்துவைவைத்து வாழ்வோம்.

எனவே, நாம் நம் வேலையைவைத்தோ, நம் மாதச் சம்பளத்தைவைத்தோ வாழ்வதாக நினைக்க வேண்டாம். தேவன் நமக்கு இறங்கி உடல்நலத்தைத் தந்திருப்பதால் இவைகளெல்லாம் சாத்தியம். "நீ வேலைக்கே போக வேண்டாம். நிழலிலே போ, நிழலிலே வா," என்று சொல்லும் அளவுக்கு நம்

முடைய பெற்றோர்கள் நமக்கு வசதியெல்லாம் செய்து தரவில்லை; செய்து தரவேண்டிய அவசியமும் இல்லை. நாம் தேவனைச் சார்ந்து வாழவேண்டும்.

ஆகவே, அப்படிப்பட்ட நீண்ட கால துன்பங்கள் நேரிடும்போது நம்முடைய முதல் மாறுத்தரம் என்ன வென்றால் நாம் சகிக்க வேண்டும். ஒரு துன்பம் நேரிடும்போது முதலாவது நாம் என்ன செய்வோமென் றால் நம்முடைய வாய் நிறைய வார்த்தைகள் வரும். பிறகு அந்தத் துன்பத்திற்கு யாரையாவது குற்றம் சாட்டுவோம். அப்படிக் குற்றம் கண்டுபிடித்துவிட்டால் மனதிலே நமக்கு ஒரு ஆறுதல் வரும்.

எடுத்துக்காட்டாக, "நான் வளரும்போது என் அம்மா எனக்குச் சரியாகவே சோறு கொடுக்கவில்லை. அதனால்தான் இந்த நோய் எனக்கு வந்திருக்கிறது," என்று நினைப்பவர்கள் இருக்கலாம். அப்படிச் சொல்வதில் அவர்களுக்கு ஒருவகையான திருப்தி, ஆறுதல்.

"என்னை ஒரு மோசமான பள்ளிக்கூடத்திலே படிக்கவைத்தார்கள். அதனால்தான் எனக்கு நல்ல வேலையே கிடைக்கவில்லை," என்று சொல்லுகிற பிள்ளைகள் இருப்பார்கள். நல்ல வேலை கிடைக்க வில்லை என்றால் அப்பாதான் காரணம் என்பார்கள். நல்ல வேலை கிடைத்தது என்றால் அதற்குத் தான்தான் காரணம் என்பார்கள்.

"இந்த நாட்டிலே எவ்வளவோ புகை, மாசுக் கட்டுப்பாடே கிடையாது. அதனால்தான் எனக்கு இவ்வளவு வியாதி. என் பிள்ளைகளுக்கு இவ்வளவு வியாதி," என்று சொல்லுகிறவர்கள் நிறையப்பேர்.

நீங்கள் ஒரு கதை கேள்விப்பட்டிருக்கலாம். சாத்தான் ஒருமுறை தேவனிடத்தில் போய் மிகவும் அதிக மாக அழுதானாம். "எதற்காக அழுகிறாய்?" என்று தேவன் கேட்டாராம். "அவர்கள் பண்ணுகிற தவறு களுக்கெல்லாம் உங்கள் பிள்ளைகள் நான்தான் காரணம் என்று சொல்கிறார்கள்," என்று சொல்லி சாத்தான் அழுதானாம். இது நகைச்சுவைதான். இது யாரையும் புண்படுத்தாத நகைச்சுவை. ஆனாலும், அதிலே ஓரளவுக்கு உண்மை இருக்கிறது.

சாப்பிடவேண்டியவிதத்தில் நாம் சாப்பிடாவிட்டால் நாம் பிரச்சினைகளை வருவித்துக்கொள்வோம். "இயேசுவின் நாமத்தில் நோய் சுகமாவதாக; இந்த நோயைக் கொண்டுவருகிற சாத்தானை இயேசுவின் நாமத்தில் கடிந்துகொள்கிறேன்." என்றால் பேய், "உன் தொண்டையில் கத்தி வை என்று உன் தேவன் உனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். நீ அதைச் செய்ய மாட்டேன் என்கிறாய். அதை விட்டுவிட்டு நீ என்னைக் கடிந்துகொள்கிறாய்," என்று சொல்வான்.

ரோமர் 5:3, 4யை நாம் வாசிப்போம். "*அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களி லேயும் மேன்மைபாராட்டுகிறோம்*". "Suffering produces endurance and endurance produces character".

ஒரு சுடுசொல்லைத் தாங்க முடியவில்லையென்றால், ஒரு கொடுமையான எஜமானிடம் ஒரு வருடம் வேலை செய்ய முடியவில்லையென்றால், ஒரு துன்பத்தைச் சகிக்க முடியவில்லை என்றால் என்ன பொருள்? தேவனுடைய மக்கள் ஒரு சூழ்நிலையைச் "சகிக்க வேண்டும்', "பொறுக்க வேண்டும்", "தாங்க வேண்டும்". அது ஒரு சூளையைப்போல இருந்தாலும்கூடப் பொறுக்க வேண்டும், தாங்க வேண்டும், சகிக்க வேண்டும். "இந்த வீட்டைவிட்டுக் கிளம்பி விடுவோமா? இந்த வேலையைவிட்டுக் கிளம்பிவிடுவோமா? இந்த நாட்டைவிட்டுக் கிளம்பிவிடுவோமா? இந்த சபையைவிட்டுக் கிளம்பிவிடு வோமா?" என்றெல்லாம் தேவ மக்கள் யோசிக்கக்கூடாது.

## நெகேமியாவின் அனுபவம்

"என்னைப்போல ஒரு மனிதன், என்னையொத்த ஒரு மனிதன் ஓடிப்போவானோ?" என்று சொன்னவர் நெகேமியா. அந்த வாக்கியத்தை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். "என்னைப்போல உள்ள ஒரு மனிதன்!" அவனை பயமுறுத்துகிறார்கள். "நீர் வாரும்; தேவாலயத்துக்குள்ளே நாம் ஒளிந்து கொண்டு, பதுங்கிக்கொண்டு இந்த இரவு ஆலோசனை செய்யலாம். ஏனென்றால், உம்மைக் கொலை செய்வதற்கு தேடுகிறார்கள்," என்று சொல்லுகிறார்கள். அப்போது நெகேமியா, "என்னைமாதிரி ஒரு ஆள் பயந்து, இந்த இடத்தைவிட்டு ஓடிப்போய் தேவாலயத்திலே ஒளிந்துகொள்வானா?" என்று சொல்கிறான். அப்போதுதான், "நான் தேவாலயத்திலே போய் ஓடி ஒளிந்துகொண்டால் மக்களிடம் இவன் எவ்வளவு ஒரு பயந்தவன் பாருங்கள், கோழை பாருங்கள் என்று சொல்லலாம் இல்லையா என்று எனக்குத் தெரிய வந்தது," என்று நெகேமியா சொல்லுகிறார்.

### உடன்படிக்கைப் பெட்டியோடு யோர்தானில் லேவியர்கள்

இஸ்ரயேல் மக்கள் யோர்தானைக் கடப்பதற்குமுன் யோர்தானிலே பெருவெள்ளம் புரண்டோடுகிறது. வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கும்போதே லேவியர்கள் தேவனுடைய சாட்சிப் பெட்டியைச் சுமந்தவாறு வெள்ளத்திலே முதலாவது கால் வைத்து நிற்க வேண்டும். அப்போது புரண்டோடி வந்த வெள்ளம் நின்றது. இஸ்ரயேல் மக்கள் எல்லாரும் அந்த யோர்தானைக் கடந்துபோனார்கள். இஸ்ரயேல் மக்கள் எல்லாரும் யோர்தானைக் கடந்துபோகிறவரை அந்த லேவியர்கள் பெட்டியைச் சுமந்துகொண்டு நிற்க வேண்டும். “ஐயோ! எல்லாரும் போகப் போகிறார்கள். நான் கடைசியிலே அல்லவா போகப் போகிறேன். என்னுடைய வரிசை வருவதற்குள்ளாக வெள்ளம் திரும்ப வந்துவிட்டால்!!” என்பதல்ல.

ஆகவே, சகிப்புத்தன்மை என்பது இன்னும் சொல்லப்போனால், ஏசாயா 53இல் சொல்லியிருக்கிறபடி, **ஒன்றும் சொல்லாமல்கூட சகிப்பது.**

### யோசேப்பின் அனுபவம்

ஒருவனையும் குற்றம் சொல்லாமல் யோசேப்பு அனுபவித்த நீண்டகால துன்பத்தை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். நாம் யாரும் அப்படிப்பட்ட நீண்டகால துன்பத்தைச் சகிக்கவில்லை. அப்போதும் அவன் தன்னுடைய சகோதரரைப்பற்றிச் சொல்கிறான். “*நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். ஆனால், தேவன் அதை நன்மையாக மாற்றினார். நீங்கள் செய்யவில்லை. தேவனே என்னை உங்களுக்கு இரட்சகனாக மாற்றுவதற்காக அப்படிப்பட்ட ஒரு வழிமுறையைப் பயன்படுத்தினார்,*” என்று அவன் தன் வாழ்வில் நடக்கிற துன்பங்களுக்கு ஒரு விளக்கவுரை கொடுக்கிறான். இது நான்காவது குறிப்பு. **துன்பங்களின் ஒரு நோக்கம் “endurance” சகிப்புத்தன்மை, நீடியபொறுமை, தாங்கும் திறன்**. அதை நமக்குள் உருவாக்குவதற்காக. Endurance produces character. சகிப்புத்தன்மை உருவாக்கப்படாத ஒரு மனிதனில் இயேசுகிறிஸ்துவின் குணம் உருவாகுவது இல்லை.

### தேவனுடைய ஆளுகை

ஆனால், 1 கொரிந்தியர் 10:13ஆம் வசனத்தை நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், நம் திராணிக்குமிஞ்சி சோதிக்கப்படுவதற்கு அவர் அனுமதிப்பதில்லை. நாம் ஒரு துன்பத்தின்வழியாய்ப் போகும்போது அந்தத் துன்பத்தின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துகிற knobs தேவனுடைய கைகளில்தான் இருக்கின்றன. அவர் நிறைய knobs வைத்திருக்கிறார். Meter adjust பண்ணுகிற knob. Centimeter adjust பண்ணுகிற knob, millimeter adjust பண்ணுகிற knob. Micrometer adjust பண்ணுகிற knob. Vernier Caliper இருக்கும். அதுபோல, தேவன் நம்மைத் துல்லியமாக calibrate பண்ணுவார். ஒவ்வொரு மனிதனையும் அவர் அளந்து, அவரவர்க்கு ஏற்றாற்போல் அவர் நபர்களையும், சூழ்நிலைகளையும், காரியங்களையும் அமைக்கிறார். Temperature எவ்வளவு இருக்க வேண்டும்? Pressure எவ்வளவு இருக்க வேண்டும்? காற்று எவ்வளவு வீச வேண்டும். வெளியே எத்தனை நண்பர்கள் நிற்க வேண்டும். பகைவர்கள் நிற்க வேண்டும் என்கிற எல்லா knobs தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன? ஒரு பக்குவம் அடைவதற்கும், கனி கொடுக்கிற நிலைமைக்கு வருவதற்கும், ஒருவனுடைய தகாத உள்ளமைப்பை மாற்றுவதற்கும் எப்படிப்பட்ட ஒரு துன்பம் அவசியம் என்பதை கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் தேவன்.

### 5. துன்பங்களின்போது ஜெபித்தல்

ஐந்தாவது குறிப்பு, சகித்துக்கொண்டிருப்பது என்பது பல்லைக் கடித்துக்கொண்டு இருப்பதா? சகித்துக்கொண்டிருக்கும்போது கண்ணீரும், கதறுதலும், பயங்களும், திகல்களும் வருமா, வராதா? “ஒருவேளை இந்த நோயினால் செத்துப் போய்விடுவோமோ? இந்த வறுமையில் நாம் சாப்பாடு இல்லாமல் போய்விடுவோமோ? நம்முடையவைகள் எல்லாவற்றையும் நாம் விற்றுவிட்டு நடுத்தெருவுக்கு வர வேண்டியிருக்குமோ? நாம் நண்பர்களும் உதவியற்றவர்களுமாகி நாதியற்றவர்களாய் ஆகிவிடுவோமோ! எல்லா நண்பர்களும் நம்முடைய பகைவர்களாக மாறிவிடுவார்களோ?” என்பதுபோன்ற பயங்களும், திகில்களும், சந்தேகங்களும் பயங்களும் வருமா, வராதா? வரும்.

### தாவீதின் அனுபவம்

ஒருமுறை தாவீதினுடைய எல்லா நண்பர்களும் அவனைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று நினைக்கிறார்கள். போருக்குப் போய்விட்டு வரும்போது பார்த்தால் வேறு எதிரிகள் வந்து அவனுடைய மனைவி, மக்கள், சொத்துக்கள் எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அவனுடைய

பாளயம் வெறுமையாய் இருக்கிறது. ஒரு போர் புரிந்துவிட்டு வருகிறான். வந்து பார்த்தால் அவனுடைய மனைவி மக்கள் எல்லாம் இல்லை. எல்லாரும் தாவீதைக் கல்லெறிய வேண்டுமென்று நினைத்தார்கள் என்று எழுதியிருக்கிறது. *"தாவீது கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்,"* என்று தாவீதைப்பற்றி சொல்லியிருக்கிறது. தாவீது அழுகிறான் (1 சாமு. 30:1-6).

இப்படிப்பட்ட சமயத்திலே தேவனுடைய மக்களுடைய மிக முக்கியமான மாறுத்தரம் ஜெபிப்பது. நாம் ஜெபிப்பவர்கள் அல்ல. நம்முடைய பொதுவான ஜெபங்கள் official ஜெபங்கள், அலுவலகரீதியான ஜெபங்கள். என்னுடைய பிள்ளைகள் சின்ன வயதிலே, "கர்த்தராகிய இயேசுவே, இந்த நாளை ஆசீர்வதியும். நாங்கள் போகும்போதும் வரும்போதும் எங்களைப் பாதுகாத்துக்கொள்ளும்," என்று 4, 5 standard வாக்கியங்களைச் சொல்லி ஜெபிப்பதுண்டு. அடுத்ததாக ஜெபிக்கிறவர் creativeஆகக்கூட ஜெபம் பண்ணமாட்டார். ஜெபிக்கிற 5 வாக்கியங்களிலே 3 வாக்கியங்களை எடுத்து, 2 அல்லது 3 வார்த்தைகள் adjust பண்ணுவார். இதற்குப் பெயர் அலுவலக ரீதியான காலை ஜெபம்.

## இருதயபூர்வமான ஜெபம்

இதை நான் அற்பமாய்க் கருதவில்லை. "இருதயத்திலிருந்து ஜெபம் பண்ண வேண்டும் அல்லது நீங்கள் ஜெபம் பண்ணவே வேண்டாம்," என்று நான் சொல்லவில்லை. நீ உன் இருதயத்திலிருந்து உன் மனைவியை அன்புகூர்ந்தாலும் சரி, "கல்யாணம் பண்ணிவிட்டோமே!" என்று அன்புகூர்ந்தாலும் சரி. நீ அன்புகூர வேண்டும். "இருதயத்திலிருந்து வராத அன்பெல்லாம் எனக்கு வேண்டாம்," என்று சொல்ல முடியாது. "இருதயத்திலிருந்து எத்தனை centigrade வருகிறது? கடமையுணர்ச்சியினால் எவ்வளவு வருகிறது?" என்றெல்லாம் பார்க்க வேண்டாம். ஆனால், ஜெபிக்கும்போது அதில் இருதயம் இருக்க வேண்டும். அப்படி இருதயம் அதில் சம்பந்தப்படாவிட்டாலும் ஜெபிப்பது நல்லது. ஆனால் அது ஒரு உயர்ந்த ஜெபம் அல்ல.

நாம் உண்மையிலேயே எப்பொழுது ஜெபிக்கக் கற்றுக்கொள்கிறோம் என்றால் துன்பங்களின் வழியாகப் போகும்போதுதான் ஜெபிக்கக் கற்றுக்கொள்கிறோம். துன்பங்களின் வழியாகப் போகாத ஒரு மனிதன் ஜெபிக்கக் கற்றுக்கொள்கிறதில்லை. ஜெபிக்கவேண்டிய வண்ணம் ஜெபிக்க அவன் கற்றுக்கொள்ளவேண்டும்.

1 சாமுவேல் 1ஆம் அதிகாரத்திலே அன்னாளைப்பற்றி எழுதியிருக்கிறது. "நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்" (1 சாமு. 1:15). அவளுடைய உதடுகள் அசைந்தது; ஆனால் வார்த்தைகள் கேட்கப்படவில்லை. அதனால் அங்கிருந்த ஆசாரியனாகிய ஏலி, "இவள் அதிகமாக மதுபானம் குடித்துவிட்டாள். அதனால் போதையிலே அதிகமாக உளறுகிறாள்," என்று நினைத்தார். அவளோ, *"அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள பெண்; நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என்னுடைய மனக்கிலேசத்திலே என்னுடைய இருதயத்தை ஊற்றிவிட்டேன். உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும்,"* என்றாள் (1 சாமு. 1:15, 16).

யாக்கோபு 5:16-18ஆம் வசனங்களிலே எலியாவைப்பற்றி எழுதியிருக்கிறது. *"உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."* ஊக்கமான வேண்டுதல் என்றால் நம்முடைய இருதயத்தை ஊற்றி ஜெபிப்பது. *"எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனிதனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்று வருடமும் ஆறு மாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது"*. பாகால் தீர்க்கதரிசகளெல்லாம் காலைமுதல் மாலைவரை சுற்றிச்சுற்றி வந்து கொட்டடித்து, கும்மாளம் போட்டு, தங்களுடைய உடலைக் கத்தியால் கீறிக்கொண்டு ஜெபம் என்ற பெயரில் ஏதோவொன்றைச் செய்தார்கள். ஆனால், ஒன்றும் நடைபெறவில்லை. கர்மேல் பர்வதத்தில் எலியா அந்திப்பலி செலுத்தும் நேரத்தில், *"ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரயேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்,"* என்று சுருக்கமாய் ஜெபிக்கிறான். அப்பொழுது

கர்த்தரிடமிருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது என்று எழுதியிருக்கிறது.

ஜெபம் பண்ணினால் அந்த மாதிரி ஜெபம் பண்ண வேண்டும். பாகால் தீர்க்கதரிசிகள் ஜெபம் பண்ணுகிறமாதிரி ஒரே ஜெபத்தைத் திரும்பத் திரும்பப் பண்ணக்கூடாது. இயேசுகிறிஸ்து திரும்பத் திரும்ப ஜெபம் பண்ண வேண்டாம் என்று சொன்னார் இல்லையா?

என்னைப் பொறுத்தவரை, நீங்கள் இருதயம் இல்லாமல் ஜெபம் பண்ணினாலும் சரி; திரும்பத் திரும்ப ஜெபம் பண்ணினாலும் சரி, பரவாயில்லை. ஜெபம் பண்ணுங்கள். உலகத்திலே ஜெபம் மலிந்து கிடக்கிறதுபோலவும், அதனால் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம் என்றும் நினைக்க வேண்டாம். இந்த உலகத்திலே நல்ல ஜெபங்கள் மிகக் குறைவு. ஜெபிக்கிற மக்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவு. ஜெபிக்கிற அளவு மிகக் குறைவு. தேவனுக்கு உகந்த ஜெபங்கள் மிக மிக மிகக் குறைவு.

எலியா அன்றைக்கு ஒரேவொரு நிமிடம் ஜெபித்தார் என்றும், அப்படியே வானத்திலிருந்து அக்கினி இறங்கிவிட்டது என்றும் நினைக்கவேண்டாம். எலியா மூன்றரை ஆண்டுகள் ஜெபித்தார். முழு உபவாசம் இருக்கவில்லையென்றாலும், பகுதி உபவாசம் இருந்தார். காலையிலும் மாலையிலும் மட்டும்தான் சாப்பாடு. எந்த மனிதர்களுடைய சகவாசமும் இல்லை. கேரீத் ஆற்றங்கரையிலே ஏறக்குறைய மூன்று ஆண்டுகள். அந்த ஓடையிலே ஓடின தண்ணீர். காலையில் காகம் வந்து கொஞ்சம் இறைச்சி கொடுக்கும். மாலையிலும் வந்து கொஞ்சம் இறைச்சி கொடுக்கும். இவர் யாரோடும் பேசுவதில்லை. யாரோடும் பேசவில்லை என்றால் எலியா அங்கே கவிதை எழுதிக்கொண்டிருந்தாரா? எலியா ஒன்றேவொன்றுதான் செய்துகொண்டிருந்தார். மனிதர்களுடைய சகவாசம் இல்லையென்றால் அலுப்புத்தட்டிவிடும். செய்தித்தாள் கிடையாது. தொலைக்காட்சி கிடையாது. கதை பேச முடியாது. அவனுக்கு என்ன ஆயிற்று, இவனுக்கு என்ன ஆயிற்று என்றெல்லாம் ஒன்றுமில்லை. அந்த மூன்றரை ஆண்டுகால ஜெபத்தின் விளைவுதான், ஜெபத்தின் முடிவு ஜெபம் கர்மேல் பர்வதத்தில் ஏறெடுக்கப்பட்டது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூன்றுமுறை கெத்சமனே தோட்டத்தில் ஜெபிக்கிறார். துன்பங்களிலே தேவனுடைய மக்கள் செய்யவேண்டிய மிக முக்கியமான ஒன்று தங்கள் இருதயத்தை ஊற்றி ஜெபிப்பது. அது எத்தனை ஆண்டுகள் ஆனாலும் பரவாயில்லை.

### 6. தேவனுடைய ஞானத்திலும், வல்லமையிலும், நற்குணத்திலும் விசுவாசம்

ஆறாவது, தேவனுடைய ஞானத்திலும் தேவனுடைய வல்லமையிலும், தேவனுடைய நற்குணத்திலும் நமக்கு விசுவாசம் இருக்க வேண்டும். அசைக்கப்படாத விசுவாசம் இருக்க வேண்டும். சங்கீதம் 16யை நாம் பாட்டாகப் பாடுகிறோம். “என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.” “காலம் கடந்துபோய்விட்டதே! இன்னும் வேலை கிடைக்கவில்லையே! இன்னும் கல்யாணம் ஆகவில்லையே! இன்னும் வீடு கிடைக்கவில்லையே! நிலம் கிடைக்கவில்லையே!” என்ற கவலை பலருக்கு.

சாமுவேல் தீர்க்கதரிசி கொஞ்சம் காலதாமதமாக வந்து சவுல் ராஜாவைக் கேட்டபோது, “எல்லாப் போர்வீரர்களும் ஓடிப்போகிறார்கள். அதனால் நானே தூபம் காட்டிவிட்டேன்,” என்று சவுல் சொன்னான்.

லாசரு இறந்து நான்கு நாட்கள் கழித்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வருகிறார். “காலம் கடந்துபோய்விட்டது. இனிமேல் தேவனால் ஒன்றும் செய்ய முடியாது,” என்று அவனுடைய சகோதரிகள் நினைக்கிறார்கள். அப்படியல்ல. தேவன்மேல் நம்முடைய விசுவாசம் அசைக்கப்படாத விசுவாசமாக இருக்க வேண்டும்.

தானியேலுடைய நண்பர்களாகிய அனனியா, மிஷாவேல், அசரியா ஆகிய மூவரையும் உளைக்களத்திலே தூக்கிப்போட்டபோது, “*எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர். அவர் தப்புவிக்காவிட்டாலும் நாங்கள் நீர் நிறுத்தின பொற்சிலையை வணங்குவதில்லை*,” என்றார்கள். அவர்கள் கருகவில்லை. அவர்களை அந்த உளையிலிருந்து வெளியே எடுத்தபோது அவர்கள் துணிகள் தீய்ந்துபோகவில்லை. அவர்கள் முடி கருகவில்லை. அவர்கள் முடிகள் கருகின வாசைனகூட காணப்படவில்லை.

*No smell of fire* என்று T.Austin Sparks செய்தி இருக்கிறது. நேரம் இருக்கும்போது அதை வாசித்துப் பாருங்கள். *No smell of fire.*

அக்கினியின் வாசைன முதலாய் அவர்களிடத்தில் காணப்படவில்லை. நம்முடைய தேவன் நம்மை அப்படித் தப்புவிக்க வல்லவர்.

### 7. தேவனுடைய கிருபை

ஏழாவது, தேவனுடைய கிருபை. "*அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்*" (2 கொரிந்தியர் 12:9). "*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெல னுண்டு*" (பிலி. 4:13). தேவன் நமக்கு அளந்த அளவு எவ்வளவோ அதற்கு உட்பட்டு நாம் வாழ்வோம். துன்பங்கள் இருக்கிறது. அது தேவன் அளந்த அளவு. என்னுடைய உடலிலே இந்தக் குறை இருக் கிறது. பலவீனம் இருக்கிறது. நோய் இருக்கிறது. வேதனை என்னை வருத்திக்கொண்டிருக்கிறது. ஒரு மருத்தவனுடைய கணிப்பின்படி ஒருவனுடைய எலும்பு சாக்பீஸ்போல ஆகிவிட்டது. ஆகவே, கீழே விழுந்தால் அவர் செத்துப்போவார் என்று சொல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். உடனே நாம் பயந்து பயந்து பயந்து "என்றைக்கு நான் கீழே விழுந்து சாக்பீஸ்போல பவுடர் ஆகிவிடுமோ!" என்று வாழ வேண்டிய அவசியமில்லை. "*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு*". உடனே நாம் fitness வைத்திருக்கிறதுபோல "எங்கே 100 கிலோ எடையைக் கொடு; நான் தூக்குகிறேன்," என்று நம்மால் சொல்ல முடியாது.

நம் ஓட்டத்தை முடிக்கவும், விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும் தேவன் நமக்குப் போதுமான வளங் களைத் தருவார். தேவனுடைய கிருபையை நாம் நம்பி வாழ வேண்டும். பணம் இல்லாததினால் நாம் பட்டினி கிடந்து செத்துவிட மாட்டோம். ஒருவேளை பத்து நாட்களுக்கோ, ஒரு மாதத்துக்கோ கஞ்சி மட்டும்தான் குடிக்கவேண்டுமென்றால் குடித்துக்கொள்வோம். அதனால் நாம் செத்துப்போவது இல்லை. உடலிலே ஒரு வேதனை இருக்கிறதென்றால் அதனால் நாம் செத்துப்போகப்போவதில்லை. தேவன் இளைப்பாறுதலின் காலங்களை நமக்குத் தருவார்.

எனவே, அவருடைய கிருபை என்பது கிறிஸ்துவிலுள்ள ஆராய்ந்துமுடியாத பரம வளங்கள். நாம் அனுபவிப்பதற்குக் கிடைக்கின்ற பரம வளங்கள். கிருபை என்பது தகுதியில்லாதவனுக்குக் காட்டப்படு கின்ற அன்பு மட்டுமல்ல. கிறிஸ்துவிலுள்ள ஆராய்ந்துமுடியாத பரம வளங்களை நமக்குக் கிடைக்கப் பண்ணுகிறார். தேவனுடைய கிருபை என்பது எல்லா துன்பங்களுக்கும், எல்லா நட்டங்களுக்கும், ஈடுகட்ட வல்லது.

### 8. துன்பங்களின் முடிவு மகிமை

எட்டாவது, **எல்லாத் துன்பங்களின் முடிவு மகிமையாக இருக்கும்**. துன்பங்களிலே தேவனுடைய முடிவு மகிமை என்று நாம் முதலாவது வாசித்த 1 பேதுரு 4ஆம் அதிகாரம் சொல்கிறது.. இந்த உலகத்தைப் பொறுத்தவரை சிலுவையினுடைய முடிவு மரணம். ஆனால், நம்மைப் பொறுத்தவரை சிலுவையின் முடிவு உயிர்த்தெழுதல். ரோமர் 8:28, 29, 30ஆம் வசனங்களை நாம் நன்றாய் அறிவோம். "*தேவ னிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் (நாம் நடந்துபோகின்ற துன்பங்கள் உட்பட) நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும்.*"

ஆகவே, நாம் என்ன செய்வது? இந்த நாட்களிலே **நாம் சகிக்க வேண்டும்**. **நம்முடைய இருதயத்தை நாம் ஊற்றி ஜெபிக்க வேண்டும்**. **தேவன்மேல் உள்ள விசுவாசத்தை நாம் அறிக்கையிட வேண்டும்**. சங்கீதம் 104யை நீங்கள் நன்றாய் வாசியுங்கள். அந்தச் சங்கீதம் ஆரம்பிக்கும்போது கண்ணீரில் ஆரம்பிக்கும். முடியும்போது தேவன்மேல் இருக்கின்ற விசுவாச அறிக்கையிலே முடிவடையும்.

அதேபோல் அப்படிப்பட்ட துன்பங்களின் பாதையில் நடந்துபோகிற மக்களுக்கு நாம் அவருடைய துன்பங்களைக் குறைப்பதற்கு என்ன செய்ய முடியுமோ அதை நாம் செய்ய வேண்டும். ஒன்று அவர் களுக்காக அவர்களுடைய இடத்திலே நாம் நின்று நம்முடைய இருதயங்களை ஊற்றி நாம் ஜெபிப்பது.

"நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக," என்று யோபுவின் புத்தகம் ஆரம்பிக்கிறது. ஏனென்றால் அவ னுடைய துன்பம் அவ்வளவு பெரியது. ஆனால், அந்தப் புத்தகம் முடிவடையும்போது யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். சிறையிருப்பை மாற்றத்தக்க ஜெபங்கள் ஜெபிக்கிற மக்களாய் நம்மை மாற்றுவதே எல்லாத் துன்பங்களுடைய நோக்கம். கர்த்தர் யோபுவை அவருடைய முன்னிலையைப்பார்க்கிலும் பின்னிலையை இரட்டிப்பாய் ஆசீர்வதித்தார் என்பதே எல்லாத் துன்பங்களுடைய முடிவாக இருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.